தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மானிய விலையில் நிலக்கரி வழங்குவதற்கு அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலேயும் இதே பதிலைத்தான் சொன்னேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியிலே இருக்கக்கூடிய அந்தச் செங்கல் சூளைத் தொழில் முனைவோர்களுக்கு, அவர்கள் சிறப்பாக அந்தத் தொழிலைச் செய்திட உதவிட வேண்டுமென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதனைச் செய்யும் என்ற நம்பிக்கையோடு, ஆர்வத்தோடு அவர் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். அந்தத் தொழில் முனைவோர்கள் சிட்கோ நிறுவனத்திடம் இவ்வளவு வேண்டுமென்று விண்ணப்பம் செய்வார்களேயானால், நிச்சயமாக மானிய விலையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிட்கோ நிறுவனத்தின்மூலமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

212—

அங்கன்வாடி மையம்

***11732—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், குமரலிங்கம், ஜெ.ஜெ. நகர்–II–ல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்மூலம் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 15

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், குமரலிங்கத்தில் ஜெ.ஜெ. நகர் என்ற பகுதி மட்டுமே உள்ளது. ஜெ.ஜெ. நகர் பகுதியில் சாமாரயப்பட்டி–2 என்ற பெயரில் 1–6–2004 முதல் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. ஜெ.ஜெ. நகர் குழந்தைகள் மையத்தில் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். எனவே, ஜெ.ஜெ. நகரில் புதிய மையம் தொடங்க தற்போது அவசியம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாமாரயப்பட்டி கிராமத்திலே ஜெ.ஜெ. நகர்–2–லே மையம் உள்ளது என்று கூறினார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இரண்டாவது முறை முதல்வராக இருந்தபோது, குமரலிங்கம் பேரூராட்சியிலே ஜெ.ஜெ.நகர்–1, சாமாரயப்பட்டி* B.C., M.B.C. *பகுதியிலும், ஜெ.ஜெ.நகர்–2* A.D. *காலனி 13–வது வார்டிலும், ஜெ.ஜெ.நகர்–3, பெருமாள்புதூர் பகுதியிலும், ஜெ.ஜெ.நகர்–4, குமரலிங்கம் வார்டு–9–லும் நான்கு நகர்ப் பகுதிகள் உருவாக்கப்பட்டன. அதிலே ஒரு நகர்ப் பகுதியில் மட்டும் இப்போது அங்கன்வாடி மையம் அமைக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 3 இடங்களிலும் அதிகமான மக்கள் குடியிருந்து வருகிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் வசித்து வருகிறார்கள். அவை குழந்தைகள் அதிகமாக உள்ள நெரிசல் மிகுந்த பகுதிகளாக உள்ளதால், அந்த மூன்று மையங்களிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கன்வாடி மையம் அமைக்க முன்வருவார்களா என தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 15]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, மைய அரசு அறிவித்திருக்கின்ற விதிகளின்படி, ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்தபட்ச மக்கள் தொகை 400 ஆகவும், அதிகபட்ச மக்கள் தொகை 800 ஆகவும் இருக்க வேண்டுமென்றும் அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதி வருமேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் ஒன்றியத்திலே மொத்தம் உள்ள 77 மையங்களிலே 47 மையங்களுக்குக் கட்டடங்கள் உள்ளன. மீதியுள்ள 30 மையங்களுக்குக் கட்டடங்கள் இல்லாத நிலை உள்ளது. அதேபோல, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலை ஒன்றியத்திலே மொத்தம் 113 மையங்கள் உள்ளன. அதிலே 96 மையங்களுக்குக் கட்டடங்கள் உள்ளன. மீதியுள்ள 17 மையங்களுக்குக் கட்டடங்கள் இல்லாத நிலை உள்ளது. ஏற்கெனவே, கடந்த 12 ஆண்டுக் காலமாக சட்டமன்ற உறுப்பினராக நான் பணியாற்றிக் கொண்டிருக்கிற நிலையில், அந்த அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தர நிதி ஒதுக்கிக் கொடுத்துள்ளேன். மீதமுள்ள இடங்களுக்கும் அரசுமூலமாக அந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அரசு நிதிகளை ஒருங்கிணைத்து அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் அங்கன்வாடி மையங்கள் கட்டிக்கொள்ளலாம். மேலும், அவசியமிருப்பின், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதியில் அங்கன்வாடி மையங்கள் இல்லை என்று குறிப்பிட்டுச் சொல்கிறாரோ, அந்தந்தப் பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

மகளிர் கல்லூரி

509*—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, வடசென்னிமலையில் மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, வடசென்னிமலையில் புதிய மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*